மதுரை அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம் ஆதனூர் ஊராட்சி மன்ற தலைவரின் நடவடிக்கைகள் முன்னிலை திருமதி.சத்தியா செந்தில்குமார்

ந.க.எண். 45 ஆதனூர் ஊராட்சி நாள்: 24/6/2023

பொருள் குடியிருப்பு மனைப்பிரிவு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் மதுரை மாவட்டம் வாடிப்பட்டி வட்டம் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம் ஆதனூர் ஊராட்சி ஆதனூர் கிராமம் சர்வேஎண்.102/2 நிரில் 7050.00 ச.மீ பரப்பளவு உள்ள இடத்தில் தொழில்நுட்ப ஒப்பதல் திட்ட அனுமதி வழங்கி உத்தரவிடல் தொடர்பாக

பார்வை 1. அரசாணை எண்.79, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 04.05.2017 மற்றும் அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, UD4(1), நாள் 09.12.2020

2. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் மதுரை அவர்களின் கடிதம் ROC 9338/2023/SWP-UZYDEVO1 நாள் 06.06.2023-ன் ம.வ/மா.ந.ஊ.அ (மதுரை மாவட்டம்) (இணையதள ஒப்புதல்) எண்.43/2023 நாள் 06.06.2023

3. திரு.M.முருகன் கதவு எண். 2/639 மதுரை - 625 014 என்பவரின் வளர்ச்சி கட்டணம் ஊராட்சி மன்றத்தலைவர் ஆதனூர் ஊராட்சி பெயருக்கான ரூ.1,19,775 கனரா வங்கி அலங்காநல்லூர் கிளை வரைவோலை எண்கள். நாள் 22.06.2023

உத்தரவு

பார்வை 2-ல் காணும் நடவடிக்கையில் மதுரை மாவட்டம் மதுரை அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம் மதுரை வாடிப்பட்டி வட்டம் ஆதனூர் ஊராட்சி ஆதனூர் கிராமம் சர்வே எண்.102/2 நிரில் 7050.00 ச.மீ இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/மா.ந.ஊ.அ (மதுரை மாவட்டம்) எண்.43/2023 (இணையதள ஒப்புதல்) என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதியும், உத்தேச குடியிருப்பு மனைபிரிவிற்கு சிறப்ப நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளின் படி திட்ட அனுமதி வழங்கி வரபெற்றுள்ளது

பார்வை 3-ல் காணும் மனுதாரர் ஆதனூர் ஊராட்சி ஆதனூர் கிராமம் சர்வே எண்.102/2 நிரில் 7050.00 ச.மீ பரப்பளவில் உள்ள 34 (1 முதல் 34) மனைகளுக்கு மனை ஒன்றிற்கு ரூ.35,22.80 வீதம் மொத்தம் ரூ.1,19,775 வளர்ச்சி கட்டணம் ஆதனூர் ஊராட்சியில் செலுத்தி உள்ளார் மேலும் ஆதனூர் ஊராட்சி உள்ளாட்சி அமைப்பு பொது உபயோகத்திற்க்கும் சாலைக்கும் மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின் பகிர்மான கழகத்திற்க்கு (TANGEDCO) கீழ்கண்டுள்ளவாறு சார்பதிவாளர் மதுரை அலங்காநல்லூர் சார்பதிவகம் அலுவலகத்தில் பதிவு செய்து அதன் பத்திரம் நகல் வழங்கியுள்ளார்

எண்	இனாம் சாசனம் விபரம்	ஆவண எண்கள்	சதுர மீட்டர்
1	தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிமான கழகம் மதுரை	2664/2023	33.70
2	ஊராட்சி மன்றத்தலைவர் ஆதனூர் ஊராட்சி	2661/2023	28.71

1. கொள்கை அளவிலான ஒப்புதல் அளிப்பதன் மூலம் நிலஉரிமையை உறுதிபடுத்தவில்லை கொள்கை அளவில் ஒப்புதல் அளிப்பதற்க்கு முன்பு பெறப்பட்ட நிலஉரிமை ஆவணங்களின் அடிப்படையில் அரசாணையின் படி மனைப்பிரிவு வரைபடம் தயார் செய்து கொள்கை அளவில் ஒப்புதல் வழங்க வழிவகை உள்ளதா என்று மட்டுமே பார்க்கப்படுகிறது. சொத்தினை பரிமாற விரும்பும் எந்த நபரும் சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதி செய்து கொள்ள வேண்டும். அதன் மீது வேறு எவரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான நீதிமன்றத்தில் முன் தீர்க்கப்படலாம் நில உரிமை குறித்து முடிவு செய்ய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை பொருத்தமான அமைப்ப அல்ல

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்க்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளதால் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்க்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யப்பட்டும் மேலும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன் படி தங்களின் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3. மனைப்பிரிவு சாலைகள் அனைத்தும் கொள்கையிலான மனைப்பிரிவு வரன்முறை வரைபடத்தின்படி தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன் படி பதிவுத்துறையில் செயல் அலவலர் ஊராட்சி மன்றத் தலைவர் ஆதனூர் ஊராட்சி மதுரை அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம் என உள்ளாட்சியின் அபிவிருத்திக்கு பதிவு செய்து வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

4. அரசானை (நிலை) எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 13.10.2017-ல் உள்ள விதி எண். 7(G) 8-ன் படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு உள்ளாட்சி அமைப்பு அணுகுசாலைகள் மற்றும் TANGEDCO இடங்கள் தொடர்புடைய உள்ளாட்சியின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டதில் நில அளவைகளில் மாற்றம் இருப்பின் உரிய அரசாணைகளின்படி தங்கள் மீது ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் சட்ட திட்டங்களுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5. மனைப்பிரிவின் மனை அளவுகள் புல எண்கள் மற்றும் உத்தேச சாலை அமைப்புகள் ஆகியவற்றை செயல் அலுவலர் / ஊராட்சி மன்றத் தலைவர், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் உயர் அலுவலர்கள் அவர்களின் ஆய்வின் போது காட்டப்பட்டதில் மாற்றம் ஏதும் இருப்பின் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன் படி தங்கள் மீது உரிய சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

6. இந்த மனைப்பிரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எந்த துறையின் மூலமும் எடுக்கப்படவில்லை என்றும் எந்தந்த துறைக்காகவும் நிலம் கையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்படவில்லை எனவும் நிலமானது தமிழ்நாடு நகர்புற நில உச்சவரம்புச் சட்டம் மற்றும் நில சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் கவரப்படவில்லை என தங்களால் உறுதி மொழி சான்று வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

7. கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மனையின் பரப்பளவு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது கூடுதல் பரப்பளவு இருப்பது பின்னர் தெரிய வந்தால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994-ன் படி தங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

8. பெறப்பட்ட ஆவணங்களின்படி தயார் செய்யப்பட்ட வரைபடத்திற்கு உள்ளாட்சி விதிகளின் படி உரிய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

9. மனைகளில் அமைந்துள்ள கட்டிடங்கள் வரன் முறைப்படுத்தப்பட்டதாக கருதப்படக்கூடாது.

10. மனையிடத்தினை சுற்றிலும் மரக்கன்றுகள் நடப்பட வேண்டும்.

11. மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஆதனூர் ஊராட்சி ஆதனூர் கிராமம் சர்வே எண்.102/2 நிரில் 7050.00 ச.மீ பரப்பளவில் உள்ள 34 (1 முதல் 34) முடிய மனைகளுக்கு மட்டும் ஆதனூர் ஊராட்சி மூலம் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

இடம் : ஆதனூர்

நாள் : 24/6/2023

S. Savu.
தலைவர்
ஆதனூர் ஊராட்சி
அலங்காநல்லூர்

இணைப்பு

1. உதவி இயக்குநர்
   மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
   மதுரை அவரின் நடவடிக்கைகள்
2. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்
3. மனைப்பிரிவு நிபந்தனைகள்

பெறுநர்

திரு.M.முருகன் த/பெ.மாணிக்கம்

கதவு எண.2/639, ஆதனூர்

வாடிப்பட்டி வட்டம், மதுரை - 625 501

நகல்

1 ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
மதுரை அவர்களுக்கு பணிந்து அனுப்பபடுகிறது

2 சார்பதிவாளர் பதிவுத்துறை
சார்பதிவாளர் அலுவலகம்
அலங்காநல்லார் மதுரை

3. S. Sayu.
தலைவர்
ஆதனூர் ஊராட்சி
அலங்காநல்லூர்